**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.259/2022**
**வழக்கு சாட்சி PW-5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | லில்லிபாய் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | செல்வமணி | தொழில் | : | காவல் ஆய்வாளர் (ஓய்வு) |
| கிராமம் | : | நித்திரைவிளை | வயது | : | 66 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Monday of 09.03.2026.

**(3, 4 எதிரிகள் காணொளி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்கள். 1ம் எதிரி ஆஜர்படுத்தப்படவில்லை. இதர எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் தமிழ்நாடு காவல்துறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்று நித்திரைவிளையில் குடியிருந்து வருகிறேன். கடந்த 08.10.2017ம் தேதி, அதிகாலை 04.30 மணிக்கு தென்காசி காவல்நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளராக நான் பணியில் இருந்தபோது, உதவி ஆய்வாளர் சேகனா என்பவர் கொடுத்த தனிஅறிக்கையின் அடிப்படையில் காவல் நிலைய குற்றஎண்.483/2017, சட்டப்பிரிவுகள் 120(பி), 399 இதச படி வழக்கு பதிவு செய்தேன். அதன் அசல் நகல்களை தென்காசி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகும்.

பின்னர், இந்த வழக்கினை என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அன்றைய தினம் காலை 05.30 மணியளவில் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் அஜேஸ் மற்றும் ராஜன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.3** ஆகும். வரைபடம் **அ.சா.ஆ.4** ஆகும். பின்னர், சாட்சிகள் அஜேஸ் மற்றும் ராஜன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர், நிலையம் வந்து அன்றைய தினம் காலை 06.40 மணிக்கு காவல்நிலையத்தில் இருந்த எதிரிகளை கைது செய்தேன். எதிரிகள் பால்தினகரன் மற்றும் சேகர் ஆகியோர்களை விசாரிக்க அவர்கள் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முகமது இஸ்மாயில், முகமது அலிசேரி ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவர்கள் வைத்திருந்த இருசக்கரவாகனம், அரிவாள், மங்கி குல்லா, மிளகாய்ப்பொடி பாக்கெட், கையில் போடப்படும் இரப்பர் உறை, சிறிய இரும்பு பாறைக்கம்பி, ஆணி பிடுங்கும் கம்பி ஆகியவற்றை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6** ஆகும். அத்தாட்சிகள் **அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8** ஆகும்.

பின்னர், எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.9** ஆகும். TN–76–M–8325 பதிவெண் கொண்ட ஹீரோ கோண்டாபேஷன் புரோ பைக் – அ.சா.பொ.1 ஆகும். TN–76–AC–2849 பதிவெண் கொண்ட ஹீரோ கோண்டாடீலக்ஸ் பைக் – அ.சா.பொ.2 ஆகும். அரிவாள் – அ.சா.பொ.3 ஆகும். மங்கி

குல்லா(2 எண்ணம்) – அ.சா.பொ.4 வரிசை ஆகும். மிளகாய்ப்பொடி பாக்கெட்(2 எண்ணிக்கை) – அ.சா.பொ.5 வரிசை ஆகும். கையில் போடப்படும் இரப்பர் உறைகள் (2 ஜோடி) – அ.சா.பொ.6 ஆகும். சிறிய இரும்பு பாறைக்கம்பி – அ.சா.பொ.7 ஆகும். ஆணி பிடுங்கும் கம்பி – அ.சா.பொ.8 ஆகும். பின்னர், சாட்சிகளை விசாரித்து எதிரிகள் இதச பிரிவுகள் 399 ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

ரோந்து சென்ற காவலர்கள் எந்த வாகனத்தில் சென்றார்கள் என்றால் போலீஸ் ஜீப்பில் சென்றார்கள். போலீஸ் ஜீப்பில் வாக்கி – டாக்கி இருக்கும் என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கு வான்செய்தி சம்பவயிடத்திலிருந்து வரவில்லை என்றால் சரிதான். எதிரிகளை காவல் நிலையத்திற்கு எந்த வாகனத்தில் அழைத்து வந்தார்கள் என்றால் அதே ஜீப்பில் தான் அழைத்து வந்தார்கள். காவல்நிலைய ஜீப்பில் 12 நபர்கள் செல்ல முடியாது என்றால் சரியல்ல. எதிரிகளை காவல்நிலையத்திற்கு அழைத்து வந்து பொய் வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல.

பாக்கெட் டைரியை பராமரிப்பது வழக்கம் என்றால் சரிதான். நான் பாக்கெட் டைரியை பார்த்தேன். ஆனால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 2 இருசக்கரவாகனங்களின் உரிமையாளர்கள் யார் என்று நான் எதிரிகளிடம் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. உரிமை ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. அரிவாள், கம்பி ஆகியவற்றின் நீளம், அகலம் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை.

நான் சொன்ன நாள், நேரத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், முதல்தகவல்அறிக்கை எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல.

இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட சான்றுபொருட்களுக்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மீது வேறு வழக்குகள் எங்கள் காவல்நிலையத்தில் இருந்ததா? என்றால் சரிதான். புள்ளிவிபரக்கணக்கிற்காக பொய்யாக இந்த வழக்கு போடப்பட்டு, குண்டர் தடுப்புச்சட்டத்தின் கீழ் எதிரிகளை கைது செய்ய ஏதுவாக போடப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த சம்பவத்திற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல.

(1ம் எதிரியின் குறுக்கு விசாரணையானது, இதர எதிரிகளின் குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.)

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

சாட்சி நாகர்கோவில் முதன்மை மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Thiru. N. Iyyappan, Typist, முதன்மை மாவட்ட நீதிமன்றம், நாகர்கோவில் என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.11 11:28:51 +0530